**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | **CC**.236/2017 |
| Prosecution Witness | : | அ.சா.15 |
| Name | : | செல்வராஜ் |
| Father's/Husband Name: | : | தங்கவேல் |
| Address : | : | 213C, வசந்த் நகர், துவாக்குடி மலை, திருச்சி. |
| Age | : | 73/2023 |

தேதி: 05/10/2023

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி D.இந்துமதி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது(2 **முதல் 5 எதிரிகள் ஆஜர் /1,6,7,8 எதிரிகள் ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூர் அமராவதி கடையில் சேல்ஸ்மேனாக பணியாற்றினேன். 2006 ம் ஆண்டு தீபாவளி பண்டிகைக்காக இனிப்பு பண்டங்கள் ரூ.11,000/- மதிப்பில் விற்பனை செய்வதற்காக தனி அலுவலர் மூலம் குடோனில் பணியாற்றிய ராஜேந்திரன் எங்களுக்கு வழங்கினார். அதில் ரூ.4,740/- மதிப்பிலான இனிப்பு பண்டங்களை விற்று விட்டோம். மீதமுள்ள பொருட்கள் விற்க முடியாமல் சேதமடைந்த நிலையில் இருந்தது. அதை நான் எழுத்து மூலமாக எழுதி கொடுத்தேன். நான் பெற்றதற்கான **தேவை மற்றும் வழங்கல் படிவத்திற்கான கார்பன் பிரதி அ.சா.ஆ**.12 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. அப்போது போலீசார் என்னை விசாரித்தனரா என எனக்கு நினைவில்லை.

**<u>1 மற்றும் 6 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>2 மற்றும் 3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>4,5 ,7 மற்றும் 8 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இனிப்பு பண்டங்களை என்னிடம் கொடுத்த போது நல்ல நிலையில் தான் இருந்தது என்றால் சரி அல்ல. ஏனென்றால் தீபாவளிக்கு முதல் நாள் தான் இனிப்பு பண்டங்களை வழங்கினர். யாருடைய உத்தரவின் பெயரில் அந்த பொருள் வழங்கப்பட்டது என்றால் தனி அலுவலர் ராஜகோபால் என்பவரின் உத்தரவின் பெயரில் வழங்கப்பட்டது. தனி அலுவலர் என்ன கூறுகிறாரோ அதைத்தான் அவருக்கு கீழ் பணி புரியும் அலுவலர்கள் செய்ய வேண்டும் என்றால் கட்டாயமாக அவ்வாறு தான் செய்ய வேண்டும். எந்த தேதியில் எவ்வளவு மதிப்பிலான பொருள்களை விற்க முடியாமல் இருப்பினும் என எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் கடிதத்தை போலீசார் என்னிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அந்த பொருள்கள் எவ்வாறு சேதம் அடைந்தது என எனக்கு தெரிய வந்தது என்றால்

தீபாவளியின் போது கடையை அடைத்துவிட்டோம் இரண்டு நாட்கள் கழித்து கடையை திறந்த போது பொருட்கள் கெட்டு கசிந்து கொண்டிருந்தது. நாங்கள் அந்த பொருளை பராமரித்ததாக கூறப்படும் இடம் எவ்வாறு இருந்தது என போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.12 ஆவணத்தில் நான் பேனாவால் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். அசல் பிரதியை பார்த்தால் தான் யார் அதில் கையொப்பம் இட்டுள்ளார் என தெரியவரும் என்றால் சரியல்ல. ஏனென்றால் இந்த ஆவணத்தை பார்த்தாலே நான் தான் கையொப்பம் இட்டேன் என தெரியவருகிறது. அப்படியானால் இரண்டு பில்களிலும் தனித்தனியாக கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் இல்லை. தனித்தனியாக தான் இட்டுள்ளேன். அந்த சமயம் நான் பணியில் இருந்தேன் என்பதை காண்பிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யாததால் அந்த சமயத்தில் நான் பணியில் இல்லை என்றாலும், நான் அசல் ஆவணத்தில் கையொப்பமிடவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

Copy